பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 05 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வடகிழக்குப் பகுதி முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. வீரதீரச் செயல்கள் புரிந்த பாதுகாப்புப் படையினர் 39 பேருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கீர்த்தி சக்ரா மற்றும் சௌரிய சக்ரா விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

3. மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் காரணமாக கடந்த 11 ஆண்டுகளில் சுகாதார வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

4. ஜெர்மனி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

5. உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ishaque Iqbal** – நிதின் குமர் சின்ஹா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

வடகிழக்குப் பகுதி முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா, விவசாயம், ஜவுளி, தகவல் தொழில்நுட்பம், எரிசக்தி, உணவு பதப்படுத்துதல் ஆகிய துறைகளில் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பல்வேறு அமைச்சகங்கள் பங்கேற்கும் அமர்வுகள் இடம்பெற உள்ளன.

தொழில் துறையினர், புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்கும் கண்காட்சியும் இதில் இடம்பெறுகிறது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இந்த மாநாடு வடகிழக்குப் பகுதியின் வர்த்தகத்தையும், முதலீட்டையும் ஊக்குவிக்கும் என்று கூறியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் இந்த மாநிலங்கள் வளர்ச்சியின் புதிய உயரங்களை எட்டியுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வீரதீரச் செயல்கள் புரிந்த பாதுகாப்புப் படையினர் 39 பேருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கீர்த்தி சக்ரா மற்றும் சௌரிய சக்ரா விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 6 பேருக்கு கீர்த்தி சக்ரா விருதுகளையும், 33 பேருக்கு சௌரிய சக்ரா விருதுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டைப் பாதுகாக்கும் ஆயுத்படை வீரர்களுக்கு நாடு எப்போதும் நன்றி செலுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

யமுனை ஆற்றின் தூய்மைப் பணிகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இது தொடர்பான ஆய்வுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

தில்லியில் வசிப்பவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று திரு. அமித் ஷா  வலியுறுத்தினார்.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் காரணமாக கடந்த 11 ஆண்டுகளில் சுகாதார வசதிகள் பெருமளவு மேம்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

காயகல்ப மந்தன் திட்டம் தொடர்பாக அதிகாரிகளுடன் நேற்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

மத்திய அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், கடந்த 10 ஆண்டுகளில் தூய்மை, சுகாதாரம், நோய்த்தடுப்பு, மக்களின் ஆரோக்கியம் ஆகியவை மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் நலனுக்கு முக்கியத்தும் அளித்து திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஜெபி. நட்டா வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஜெர்மனி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜெர்மனி சென்றுள்ள அவர், தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் எதிர்ப்பது குறித்து அவர்களுடன் ஆலேசனை மேற்கொண்டதாக சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியா – ஜெர்மனி இடையேயான உறவுகளை வலுப்படுத்த ஜெர்மனி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்து வரும் ஆதரவுக்கு பாராட்டு தெரிவித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக பெர்லினில் நடைபெற்ற ஐரோப்பிய நாடுகளில் பணியாற்றும் இந்திய தூதர்கள் மாநாட்டிலும் பங்கேற்றார்.

ஐரோப்பிய நாடுகள் உடனான நல்லுறவை வலுப்படுத்துவது குறித்து திரு. ஜெய்சங்கர் அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

அதிநவீன பாதுகாப்பு தளவாடங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளதாக அதன் தலைவர் டாக்டர் சமீர் காமத் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், ஏவுகணைகள், வான்வழித் தாக்குதலுக்கான தளவாடங்கள், கடற்படைக்கான தளவாடங்கள், ட்ரோன்களை அழிப்பதற்கான கருவிகள் போன்றவை இதில் அடங்கும் என்றார்.

இவை விரைவில் பாதுகாப்புப் படைகளில் இணைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்படட பாதுகாப்பு தளவாடங்கள் முக்கிய பங்கு வகித்தது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்றும் டாக்டர் சமீர் காமத் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இனி...

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா அருண் கேதர்பால்-ன் வீரதீர சாதனைகள்...

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைக் குறிக்கும் வகையில் நாடு முழுவதும் மூவர்ணக் கொடி பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் உளுந்தூர்பேட்டையில் நடைபெற்ற பேரணியில் பிஜேபி தொண்டர்கள், முன்னாள் ராணுவத்தினர், கல்லூரி மாணவ-மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

நாமக்கல்லில் நடைபெற்ற பேரணியில் முன்னாள் ராணுவ வீரர்கள், தன்னார்வ அமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம், காட்பாடி பகுதிகளில் நடைபெற்ற மூவர்ண கொடி பேரணியில் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பாதுகாப்புப் படையினரின் தியாகத்தைப் போற்றும் வகையில் இப்பேரணியில் கலந்துகொண்டதாக இதில் பங்கேற்றவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியாவுக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கூறியுள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைக்க ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள சிவசேனா, மக்களவை உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழு அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பிரதிநிதிகளையும் நேற்று சந்தித்துப் பேசியது.

இதுகுறித்து பின்னர் பேசிய திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே, 140 கோடி இந்தியர்களின் உணர்வையும் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தீவிரவாதம் மனித குலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது என்று அவர் கூறினார்.

வர்த்தகம், கலாச்சாரம் ஆகியவற்றைத் தாண்டி பாதுகாப்புத்துறையில் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்த இந்தியாவும் - ஐக்கிய அரபு எமிரேட்சும் உறுதிபூண்டுள்ளதாக திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே கூறினார்.

<<<<>>>>

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ishaque Iqbal** – நிதின் குமர் சின்ஹா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 7-5 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் அலெக்சி - இவான் இணையை வென்றது.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – ரெமானியாவின் எலினா கேடர் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-7, 6-1, 10-7 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Zoe Hitt** – பல்கேரியாவின் **Dia Evtimova** இணையை வென்றது.

--------------

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Raiza Dhillon** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Suhl-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் **Skeet** பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

----------

**Palm Hills** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Ramit Tandon** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 11-8, 11-5 என்ற செட் கணக்கில் அர்ஜென்டினாவின் **Leandro Romiglio**-ஐ வென்றார்.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ அணி 33 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

<<<<>>>>

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி காவிரியில் தமிழகத்திற்கு ஜூன், ஜூலை மாதங்களில் வழங்க வேண்டிய நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் கூறியுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்த ஆணையத்தின் கூட்டத்தில் தமிழக மற்றும் கர்நாடக அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஜூன் மாதத்திற்கான 9 புள்ளி ஒன்று ஒன்பது டி.எம்.சி நீர் மற்றும் ஜூலை மாதத்திற்கான 31 புள்ளி இரண்டு நான்கு டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று இக்கூட்டத்தில் உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து காவிரி நீர் ஒழுங்காற்றுக் கூட்டம் ஜூன் 10ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.